செய்தி வெளியீடு எண்: 592 நாள்:15.09.2019

<u>செய்தி வெளியீடு</u>

இராமசாமி படையாட்சியார் அவர்களின் 102ஆவது பிறந்தநாள் அரசு விழாவாகக் கொண்டாடப்படுகிறது. இராமசாமி படையாட்சியார் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தமிழக அரசின் சார்பில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சென்னை, கிண்டி ஹால்டா சந்திப்பில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு கீழ் அலங்கரித்து வைக்கப்படவுள்ள திருவுருவப் படத்திற்கு நாளை(16.9.2019) காலை 10.00 மணியளவில் மலர் தூவி மரியாதை செலுத்தவுள்ளார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் செயல்படும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் தலைமையிலான தமிழக அரசு, தமிழ்ச் சான்றோர்கள், விடுதலைப் போராட்ட தியாகிகள் மற்றும் தலைவர்கள் ஆகியோரை பெருமைப்படுத்தும் வகையில், அன்னார்களது பிறந்தநாளன்று தமிழ்நாடு அரசின் சார்பில் ஆண்டுதோறும் மாலை அணிவித்து, மரியாதை செலுத்தி, விழா கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த வகையில், 29.6.2018 அன்று சட்டமன்றப் பேரவை விதி எண்.110ன் கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட அறிவிப்பில், ‘‘சமூக நீதிக்காக பாடுபட்டவரும், சுதந்திரப் போராட்ட வீரருமான மறைந்த மரியாதைக்குரிய இராமசாமி படையாட்சியார் அவர்களை பெருமைப்படுத்தும் வகையில், அவரது பிறந்த தினமான செப்டம்பர் 16ஆம் நாள் ஆண்டுதோறும் அரசு விழாவாகக் கொண்டாடப்படும்’’ என்று அறிவித்து கொண்டாடப்பட்டு வருகிறது.

மக்களுக்காக வாழ்ந்து மறைந்த ஒப்பற்ற தலைவர் இராமசாமி படையாட்சியார் அவர்கள் தென்ஆற்காடு மாவட்டம் எனப்படும் தற்போதைய கடலூர் மாவட்டத்தில் 1918ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16ஆம் நாள் பிறந்தார். இராமசாமி படையாட்சியார் அவர்கள் கடலூர் தொகுதியிலிருந்து 1952ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினராகவும், திண்டிவனம் தொகுதியிலிருந்து 1980 மற்றும் 1984 ஆகிய ஆண்டுகளில் பாராளுமன்ற மக்களவை உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். மேலும், இராமசாமி படையாட்சியார் அவர்கள் பெருந்தலைவர் காமராசர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, அவரது அமைச்சரவையில் 1954ஆம் ஆண்டு முதல் 1957ஆம் ஆண்டு வரை

உள்ளாட்சித் துறை அமைச்சராகவும் பதவி வகித்தார். இராமசாமி படையாட்சியார் அவர்கள், மக்கள் நலப் பணியோடு சமூக நீதிக்காகவும் தொடர்ந்து பாடுபட்டு வந்தார்.

அதேபோன்று, முதன்முறையாக, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என்ற பிரிவு தொடங்கப்பட்டு வன்னியர் சமூகத்திற்கு மாநிலத்தில் 20 சதவிகித இடஒதுக்கீடும், மத்தியில் 2 சதவிகித இடஒதுக்கீடும் வழங்க வேண்டும் என்ற தீர்மானத்தை, உழைப்பாளர் கட்சி மாநாட்டில் முதன்முதலில் இராமசாமி படையாட்சியார் அவர்கள் நிறைவேற்றினார். இராமசாமி படையாட்சியார் அவர்கள் 1992 ஆம் ஆண்டு ஏப்ரல் 3ஆம் தேதி உடல்நலக்குறைவால் இயற்கை எய்தினார்.

19.7.2018 அன்று சேலம் மாவட்டம், மேட்டூரில் நடைபெற்ற விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள், “மக்களுக்காக வாழ்ந்து மறைந்த ஒப்பற்ற தலைவர் இராமசாமி படையாட்சியார் அவர்களுக்கு, அவர் பிறந்த மாவட்டமான கடலூரில் முழு உருவ வெண்கலச் சிலையுடன் கூடிய நினைவு மண்டபம் அமைக்கப்படும்” என அறிவித்தார்கள். அதன்படி, கடலூர் மாவட்டம், மஞ்சக்குப்பத்தில், இராமசாமி படையாட்சியார் அவர்களுக்கு 2 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் 0.69.0 ஹெக்டேர் நிலத்தில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் முழு உருவ வெண்கலச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், 19.07.2019 அன்று தமிழக சட்டமன்றத்தில் நடைபெற்ற விழாவில் இராமசாமி படையாட்சியார் அவர்களின் திருவுருவப் படத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்துவைத்தார்கள்.

தமிழக அரசின் சார்பில், இராமசாமி படையாட்சியார் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சென்னை, கிண்டி ஹால்டா சந்திப்பில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு கீழ் அலங்கரித்து வைக்கப்படவுள்ள திருவுருவப் படத்திற்கு நாளை(16.9.2019) காலை 10.00 மணியளவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், வாரியத்தலைவர்கள், கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் சீர்மிகு பெருமக்கள் மலர் தூவி மரியாதை செலுத்துவார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**